மாகாணக் கல்வித் திணைக்களம்
පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
**Provincial Department of Education**

கிழக்குமாகாணம்,திருகோணமலை
නැගෙනහිර පළාත, ත්‍රිකුණාමලය
Eastern Province, Trincomalee
026-2222556, Fax: 026-2222871
www.edudept.ep.gov.lk

எனது இல / මගේ අංකය / My No: EP/20/01/04

திகதி / දිනය / Date: 2026.10.26

சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
கிழக்கு மாகாணம்.

**வலயங்களுக்கிடையிலான வருடாந்த ஆசிரியர் இடமாற்ற முன்மொழிவுகள் - 2027(2026)**
**கிழக்கு மாகாணம் (சிங்கள மற்றும் தமிழ் மொழி மூலங்கள்)**

கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான வலயங்களுக்கிடையிலான வருடாந்த இடமாற்றம் - 2027(2026) இற்கு விண்ணப்பித்த ஆசிரியர்களது விண்ணப்பங்கள் தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கைக்கமைவாகவும், கிழக்கு மாகாண ஆசிரியர் இடமாற்றக் கொள்கைக்கமைவாகவும் மற்றும் இடமாற்ற சபையினைப் பிரதிநிதித்துவப்படுத்திய ஆசிரியர் சங்கங்களது ஆசிரிய பிரதிநிதிகளை உள்ளடக்கிய மாகாண ஆசிரியர் இடமாற்ற சபையினது தீர்மானங்களுக்கமைவாகவும் 2027(2026) ஆம் ஆண்டுக்குரிய வலயங்களுக்கிடையிலான ஆசிரியர் இடமாற்றங்கள் முன்மொழியப்படுகின்றது என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்.

அதற்கமைவாக, இடமாற்றத்திற்காக முன்மொழியப்பட்ட ஆசிரியர்களது விபரங்களை உள்ளடக்கிய இடமாற்றப் பட்டியலானது இத்துடன் இணைக்கப்பட்டுள்ளதுடன் வலயங்களுக்கிடையிலான வருடாந்த ஆசிரியர் இடமாற்றம் - 2027(2026) இற்குரிய இடமாற்ற முன்மொழிவுகளில் திருப்தியடையாத ஆசிரியர்கள் தமது மேன்முறையீட்டு விண்ணப்பங்களை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைவாக **A4** தாளில் இரு பக்கங்களிலும் வருமாறு தயாரித்து முழுமையாக பூரணப்படுத்திய விண்ணப்பங்களை தமது பாடசாலை அதிபர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்களின் சிபாரிசுடன் **“மாகாணக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்வித் திணைக்களம், கிழக்கு மாகாணம், உட்துறைமுக வீதி, திருகோணமலை.”** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் எதிர்வரும் **2026.11.10ஆம்** திகதிக்கு முன்பாக எமக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும். அவ்வாறு அல்லாமல் எமக்கு நேரடியாகவும், 2026.11.10ஆம் திகதிக்கு பின்னரும் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எஸ்.ஆர். ஹசந்தி,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்

S.R. Hasanthi
Provincial Director of Education
Eastern Province